**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | |
| **Preliminary Register** | : | **Case No. 257/2022** |
| **Sessions** | : | |
| | | **Prosecution** |
| **Deposition of witness for** | : | **LW 1/ PW 1** |
| **Name** | .. | பாலாஜி |
| **Father's/Husband's Name** | .. | கோவிந்தசாமி |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **38** |

**Date: 30.07.2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜார் எதிரி 3 நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை வழக்கறிகரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

**கடந்த 16.05.2022 அன்று காலை 8.00க்கு மணிக்கு என்னுடைய குழந்தையை கூட்டிக்கொண்டு போய் விடப்போனேன். நாராயணனும் சசிகலாவும் என்னை அசிங்கமாக திட்டி சுலோச்சனா என்பவர் முகத்தில் மிளகாய் பொடியை போட்டு அவமானப்படுத்தினார்.**

நாராயணனும் சசிகலாவும் சேர்ந்து உருட்டுக்கட்டையால் எனது மண்டையில் அடித்துவிட்டார்கள். நான் எனது தம்பி கணேஷ் உடன் இசானி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன், எனது மண்டையில் தையல் போட்டார்கள். ஆஜர் எதிரி 1 மற்றும் 2 சாட்சியால் அடையாளம் காட்டப்பட்டது. சசிக்குமார் என்பவர் இல்லை என்றும் சாட்சியம் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிர்தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவத்தன்று ஏன் அங்கு சென்றீர்கள் என்றால் 15.05.2022 அன்று காலை 9.00 முதல் 7.00 மணி வரை குழந்தை என்னுடன் இருக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் உத்தரவிடப்படட்டது. நான் விடப்போன போது வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றும் ஜீவனாம்சம் கொடுக்க வக்கு இல்லை என்று கூறி குழந்தையை திரும்ப கூட்டிச்சொல்லுமாறு சொன்னார்கள். அவர்கள் சம்மதத்துடன் நான் குழந்தையை என்னுடைய வீட்டிற்கு அழைத்துச்சென்றுவிட்டேன்.

மறு நாள் 16.05.2022 அன்று காலை 7 மணிக்கு எங்கள் வீட்டிற்கு சரண்யா என்னுடைய மனைவி, என்னுடைய அம்மாவை தகாதவார்த்தையால் திட்டி என்னுடைய அம்மாவை அவர் உருட்டுக்கட்டையால் அடித்துவிட்டார்.

நான் உடனே பயந்து கொண்டு குழந்தையை விட்டுவிடுகிறேன் என்று கூப்பிட்டும் அவர்கள் என்னுடன் வர மறுத்து நீ போ உன்னுடைய அம்மாவை நான் சும்மா விடமாட்டேன் என்று சொன்னார்.

எந்த நீதிமன்ற ஆணையின் பேரில் குழந்தையை பார்க்க சென்றீர்கள் என்றால், தற்பொழுது தான் நீதிமன்ற ஆணை உள்ளது. அந்த சமயத்தில் W34 காவல் நிலையத்தில் என்னுடைய மனைவி வாரத்தில் ஒரு முறை குழந்தையை பார்க்க எழுதிக்கொடுத்திருந்தார்.

W34 எப்போது புகார் கொடுத்தீர்கள் என்றால் சம்பவத்திற்கு 4 மாதம் முன்பாக புகார் கொடுத்திருந்தேன். தேதி மாதம் ஞாபகம் உள்ளதா என்றால் ஆவணங்களில் உள்ளது ஞாபகம் இல்லை. எத்தனை முறை நான் காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்துள்ளது போல் நான் என்னுடைய குழந்தையை பார்த்தேன் என்றால் 2 , 3 முறை பார்த்தேன். பின்னர் பார்க்கவில்லை. இதற்கு முன்னால் குழந்தையை விட்டபோது குழந்தை தானாக வீட்டிற்குள் சென்றுவிட்டதா என்றால் இல்லை. என்னை அடிக்கிறார்கள் என்றும் உன் அப்பனுக்கு காசு கொடுக்க வக்கில்லை என்று சொல்வதாக என்னுடைய குழந்தை சொன்னது.

சம்பவத்தின் போது குழந்தைக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் 4 வயது இருக்கும். 16.05.2022 அன்று உங்களுடைய குழந்தையை உங்களது மனைவி வாங்கவில்லை என்று W34 காவல் நிலையத்திற்கு தகவல் ஏதும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

குழந்தையை நான் என்னுடன் அழைத்துச்சென்ற விசயத்தை W34 காவல் நிலையத்தில் சொன்னேனா என்றால் இல்லை. 16.5.2022 அன்று குழந்தையை வாங்கிச்சொன்றவுடன் திரும்பி வந்து நான் குழந்தையை விடவே இல்லை என்றால் சரியல்ல.

16.05.2022 அன்று காலை குழந்தையை தேடி உங்கள் மனைவி உங்கள் வீட்டிற்கு வந்தாரா என்றால் வந்தார். வந்த போது உங்களுடைய குழந்தையை அவரிடம் கொடுத்திருக்கலாம் என்றால் அவர் குழந்தையை வாங்கிக்கொள்ளவிரல்லை மாறாக சண்டை போட்டு உன்னுடைய அம்மாவை ஒரு கை பார்க்காமல் வரமாட்டேன் என்று சொன்னார்.

சம்வத்தின் போது உங்களுடன் யார் யார் இருந்தார் என்றால் என்னுடைய அம்மா, தம்பி மற்றும் கீழே வாடைகைக்கு இருக்கும் நபர்கள் இருந்தார்கள். மனைவி வீட்டிற்கு வந்த போது எத்தனை மணி இருக்கும் என்றால் 7 மணி இருக்கும்.

அதன் பிறகு குழந்தையை கொண்டு போய் அவர்களது வீட்டில் விட்டீர்களா என்றால் அரைமணி நேரம் சண்டை போட்டார். பின்னர் நான் குழந்தையை அழைத்து கொண்டு நான் அவருடைய வீட்டிற்கு சென்றேன்.

அரைமணி நேரம் சண்டை போடும் போது நானும் அங்கேதான் இருந்தேனா என்றால் அங்கு தான் இருந்தேன். பல முறை கேட்டும் அவர் கேட்கவில்லை.

சண்டை வாய்ச்சண்டையாக இருந்ததா என்றால் முதலில் வாய்ச்சண்டை பிறகு கைகலப்பு அதன்பின் உருட்டுக்கட்டையால் அடித்தார்கள். உங்கள் மனைவி யாரை அடித்தார் என்றால் அவர் என்னுடைய அம்மாவை அடித்தார்.

அடித்த போது அங்கிருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்றால் அவர் அடித்தவுடன் தான் நான் குழந்தையை கொண்டுவந்து அங்கே விடுவதாக சொன்னேன்.

மனைவி என்னுடைய அம்மாவை அடித்ததற்காக போலீசுக்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் என்னுடைய அம்மா போலீசுக்கு தகவல் கொடுத்தார் அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் தான் உள்ளது.

தகவல் எவ்வாறு அழிக்கப்பட்டது என்றால் என்னுடைய அம்மா மறுநாள்  முதலில் 100க்கு அழைத்ததாகவும் பின்னர் எழுத்து மூலமாக புகார் தெரிவிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்ததாக சொன்னார்.

புகார் எந்த காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சாத்தாங்காடு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது.  எப்போது விசாரணை செய்தார்கள் என்றால், அன்றைய தினம் மாலை விசாரித்தார்கள்.  சம்பவத்தன்று உடனே வீட்டில் வந்து போலீசார் விசாரணை செய்தார்கள். அன்றைய தினமே மாலை என்னையும் விசாரித்தார்கள்.

16.05.2022 அன்று M8  போலீஸ் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினம் மாலை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அப்போது உங்களுடைய அம்மா வீட்டில் தான் இருந்தார்கள் என்றால் இல்லை அவர் மருத்துவமனையில் இருந்தார் ஸ்ட்ன்லி மருத்துவமனை.

சம்பவத்தன்று எதிரியினுடைய வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் 7 ¾ மணிக்கு சென்றேன். அப்போது உங்களுடன் உ ங்கள் மனைவி வந்தாரா என்றால், இல்லை நானும் எனது மகனும் தான் வந்தோம். அவர் அங்கே சண்டை போட்டுக்கொண்டிருந்தார்.

எதிரியின் வீடு எத்தனாவது தளத்தில் உள்ளது என்றால் மூன்றாவது தளத்தில் உள்ளது. குழந்தையை வீட்டில் விடுவதற்காக தான் வந்தீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் எதிரி சுலோச்சனா உங்கள் மீது ஏன் மிளகாய் பொடி அடித்தார் என்றால் உங்களுடைய மகள் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார் குழந்தையை வைத்துக்கொள்ளுங்கள் என்றேன். அவர்கள் தயாராக வைத்திருந்த மிளகாய் பொடியை என் மேல் போட்டு சுதாரிப்பதற்குள் உருட்டுக்கட்டையால் என்னை அடித்துவிட்டார்கள்.

யார் உருட்டுக்கட்டையால் அடித்தார்கள் என்றால் சசிக்குமார் மற்றும் நாராயணன் எத்தனை கட்டையை வைத்து அடித்தார்கள் என்றால் ஒரே கட்டையை வைத்து இரண்டு பேரும் அடித்தார்கள். எங்கு அடித்தார்கள் என்றால் நடுமண்டையில் அடித்தார்கள். இ ரண்டு பேர் அடித்தார்கள் என்றால் எவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டது என்றால் ஒரு தையல் போட்டார்கள்.

சம்பவத்தின் போது யாராவது தடுக்க வந்தார்களா என்றால் யாரும் வரவில்லை. இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் சம்பவம் நடந்த உடனே H8 காவல் நிலையம் தான் சென்றேன்.

அவர்கள் காயம் இருந்ததால் மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள்.

புகாரை எங்கு வைத்து கொடுத்தீர்கள் என்றால் இச்சானி மருத்துவனையில் போலீசார் வந்து பெறுக்கொண்டார்கள். காவல் நிலையத்தில் இருந்து நேரிடையாக மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை வீட்டிற்கு போய் என்னுடைய தம்பியை அழைத்துக்கொண்டு தான் மருத்துவமனைக்கு சென்றேன்.

சம்பவ இடத்தில் இருந்து இச்சானி மருத்துவமனை சொல்வதற்கு இடையில் வேறு ஏதேனும் அரசு மருத்துவமனைகளோ அல்லது தனியார் மருத்துவமனையோ இருந்ததா என்றால் முதலில் நான் ஸ்டான்லி மருத்துவமனைக்கு தான் சொன்றேன். அங்கு என்னுடைய அம்மா சிகிச்சையில் இருந்ததால் என்னை வேறு மருத்துவமனைக்கு போகச்சொன்னார்கள் அதனால் நான் இச்சானி மருத்துவமனைக்கு சென்றேன்.

இடையில் வேறு மருத்துவமனைகள் இருந்தும் இச்சானி மருத்துவமனையில் இருக்கும் மருத்துவர் உங்களுக்கு தெரிந்தவர் மற்றும் காயச்சான்றிதழ் நீங்கள் கேட்பது போல் கொடுப்பார் என்று அங்கு சென்னுள்ளீர்கள் என்றால் இல்லை. இச்சானி மருத்துவமனையில் ICUல் இருந்தேனா என்றால் இடமில்லை என்று 1 மணி நேரம் ICUல் வைத்து பின்னர் நார்மல் வார்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.

மருத்துவனையில் என்னை எத்தனை போர் உருட்டுக்கட்டையால் தாக்கினார்கள் என்று நான் மருத்துவரிடம் சொன்னேன் என்றால், கட்டையால் தாக்கியதாக சொன்னேன் ஒரு மணி நேரத்தில் காவலர்கள் அங்கு வந்துவிட்டார்கள்.

நான் மருத்துவரிடம் சென்ன போது என்னை மூன்று நபர்கள் கட்டையால் தாக்கியுள்ளார்கள் என்று சொன்னேனா என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில் சசிக்குமார் மட்டும் தான் என்னை கட்டையால் தாக்கியுள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

எதிரியின் வீட்டில் ஒரு போதும் உருட்டுக்கட்டைகள் இருந்ததில்லை என்றாலும் அவர்கள் உங்களை தாக்கவில்லை என்றாலும் நானே காயத்தை ஏற்படுத்திக்கொண்டு எதிரிகள் மீது புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மிளகாய் தூள் கண்ணில் எறிந்ததற்கு சிகிச்சை எடுத்துள்ளேனா என்றால் எடுத்தேன். இரண்டு நாள் கழித்து செல்வராணி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். அதற்கான மருத்துவ அறிக்கை ஏதேனும் போலீசிலோ நீதிமன்றத்திலோ கொடுத்தேனா என்றால் இல்லை.

நான் வேண்டுமென்றே 2வது எதிரிக்கு எதிராக புகார் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உருட்டுக்கட்டையால் அடித்தபோது என்மேல் இரத்தம் வழிந்திருந்ததா என்றால் ஆம் என்னுடைய

**பனியனில் இரத்தம் இருத்தது. சம்பவத்தன்று என்ன நிற உடை அணிந்திருந்தேன் என்றால் வெள்ளை நிறத்தில் சிகப்புகலர் டிசைன் போட்டிருக்கும்.**

**எதிரிகள் உங்களின் மேல் எத்தனை புகார்கள் அளித்துள்ளார்கள் என்றால் இந்த சம்பவத்தில் அவர்களும் என்மேல் ஒரு புகார் அளித்துள்ளார்கள். இது சம்பந்தமாக நான் ஒரு புகாரும், என்னுடைய தாயார் ஒரு புகாரும், என்னுடைய வழக்கறிஞர் செல்வக்குமார் ஒரு புகாரும் மனைவி மேல் அளித்துள்ளார்கள் என்றால், நான் பாதிக்கப்பட்டதற்கு நானும், என்னுடைய தாயார் பாதிக்கப்பட்டதற்கு அவரும் வழக்கறிஞரை செருப்பால் அடிக்கச் சொன்றதால் அவரும் புகார் கொடுத்துள்ளோம். என்னுடைய தூண்டுதலின் பெயரில் தான் வழக்கறிஞர் பகார் கொடுத்தாரா என்றால் இல்லை அவர்தான் புகார் கொடுத்தார்.**

**எதிரி குடும்பத்தை பழிவாங்க வேண்டும் என்று நான் பொய்யான புகாரை அளித்துள்ளேனா என்றால் இல்லை.**

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2025.07.30 17:01:40 +0530

நீதித்துறை நடுவர்,
திருவொற்றியூர்